தொட்டியம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:திருமதி இரா.பார்வதி.,

ந.க.எண்: 2/2023-24

பொருள் :

மனைபிரிவு அனுமதி - கள்ளகுறிச்சி மாவட்டம் - சின்னசேலம் வட்டம் - சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் - தொட்டியம் ஊராட்சி , தொட்டியம் கிராம சர்வே எண்: 93/1A 1.00 ஏக்கர் 4047.00 சதுரமீட்டர் பரப்பளவில் சிவசக்தி நகர் மனைபிரிவு அமைத்தல் - அனுமதி வழங்க உத்தரவிடல் - தொடர்பாக .

பார்வை :

1.திருமதி M.பிரியா க/பெ முருகன், NO.8/4 மணிகூண்டு பள்ளி தெரு, கள்ளகுறிச்சி வட்டம், கள்ளகுறிச்சி மாவட்டம்.
2.உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, மாவட்ட நகர் ஊரமைப்பு, கள்ளக்குறிச்சி அவர்களின் ROC.NO: RBFS4C4N/12864/2023 நாள்:16.10.2023
3.அரசு ஆணை எண் 138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் . 04.06.2004
4.அரசானை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017
5.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளகுறிச்சி அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020 போ நாள்:24.12.2020
6.தொட்டியம் ஊராட்சி, தொட்டியம் கிராம மன்ற தீர்மான எண். 49/2023-24 நாள்:11.01.2024

.....

உத்தரவு :

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொட்டியம் ஊராட்சி, தொட்டியம் கிராம சர்வே எண் - 93/1A , 1.00 ஏக்கர் 4047.00 சதுர மீட்டர் பரப்பளவில் சிவசக்தி நகர் மனைபிரிவு அமைக்க பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி விண்ணப்பித்துள்ளார். பார்வை 4-ல் காணும் அரசாணையின் படி கூராய்வு கட்டணம் ரூ.6071/- மற்றும் நிலம் பயன் மாற்று கட்டணம் உரிய தலைப்பில் செலுத்திய பின் அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஊராட்சி கூராய்வு கட்டணம் ரூ.2000/- நாள்:10.01.2024 அன்றும் நிலபயன்மாற்று கட்டணமாக ரூபாய் - 11723/-ஐ 16.10.2023 அன்றும் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டது. மேற்படி மனைகளுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 1994ம் வருடம் 2(சி)ன் படியும் பார்வை 2-ல் காணும் அரசாணையின்படி கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தீர்மான எண்:49 நாள்:11.01.2024 மனைபிரிவு அமைக்க அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

விண்ணப்பதாரர் பெயர்	-	திருமதி M.பிரியா க/பெ முருகன்
முகவரி	-	NO.8/4, மணிகூண்டு பள்ளி தெரு, கள்ளகுறிச்சி வட்டம் (ம) அஞ்சல், கள்ளகுறிச்சி மாவட்டம்.
மனைபிரிவு அமையும் இடம்	-	தொட்டியம் ஊராட்சி / தொட்டியம் கிராம சர்வே எண் -93/1A
பரப்பளவு	-	1.00 ஏக்கர் 4047.00 சதுர மீட்டர்
ஒப்புதல் வழங்கப்படும் மனைகள்	-	25 மனைகள்

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளகுறிச்சி அவர்களின் இணையதள கோப்பு எண் . RBFS4C4N/12864/2023 நாள்: 16.10.2023-ன் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கப்படுகிறது.
2. ஊராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் ஆகியவற்றை மாற்றம் செய்ய கூடாது.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்க்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
4. பொது பயன்பட்டிற்காக உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்ட தெருக்கள் மற்றும் பொது இடத்தில எந்த வித மாற்றமும் செய்யக் கூடாது.
5. மனுதாரர் மனைபிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலையின்றி மனைபிரிவு நுழைவு வாயிலில் 6×4அளவிலான நிரந்தர தகவல் பலகை பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைபிரிவு அங்கீகரித்த மன்ற ஊராட்சி மன்ற தீர்மான எண் தெளிவாக குறிப்பிட்டு தகவல் பலகை வைக்கப்படவேண்டும்
6. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அனுமதிக்கப்படவேண்டும்.

R.பார்வதி
தலைவர்
ஊராட்சி மன்ற தலைவர்
தொட்டியம்

ஊராட்சி மன்ற தலைவர்

பெறுதல்:

திருமதி M.பிரியா க/பெ முருகன்
NO.8/4, மணிகூண்டு பள்ளி தெரு,
கள்ளகுறிச்சி வட்டம் (ம) அஞ்சல்,
கள்ளகுறிச்சி மாவட்டம்.
PINCODE-606202

நகல் :

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்
சின்னசேலம் , கள்ளகுறிச்சி (DR), கள்ளகுறிச்சி (DT).
2. உதவி இயக்குந, நகர் ஊரமைப்பு , கள்ளக்குறிச்சி.
3. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பபடுகிறது.